ISSN:2582-9599



# ஆழ்வார்களின் பாசுரங்களில் வாழ்வியல் சிந்தனைகள்

க.சுரேஷ்
முனைவர் பட்ட ஆய்வு மாணவன்,
தமிழாய்வுத் துறை, அரசு கலைக் கல்லூரி,
திருச்சிராப்பள்ளி-22.
Sureshrk82@gmail.com.

29

ஆய்வு சுருக்கம்:
பக்தி இலக்கியங்களில் ஆழ்வார்களின் பாசுரங்களில் கூறப்பட்டுள்ள வாழ்வியல் சிந்தனைகள் பற்றி இக்கட்டுரை ஆய்கின்றது. குழந்தை பருவத்தில் தொடங்கி வீடு பேறு அடைவது வரை ஆழ்வார்களின் சிந்தனைகள், ஆழ்வார்கள் அருளிச் செயல்கள் வழியாக குழவி சீராட்டல் , செய்யாதன செய்யோம் , சமூக மாட்சி , தெய்வம் உறையுமிடம் என்னும் தலைப்புகளின் கீழ் இவ்வாய்வு கட்டுரையை சமர்ப்பிக்கின்றேன்.

## முன்னுரை

ஒரு சமுதாயத்தின் நலனை அறிவதற்கு அச்சமுதாய மக்களின் கருத்து வளம் அளவுகோலாக அமைகிறது. இத்தகைய கருத்துவளம் காலம் காலமாக நம் முன்னோர்களிடையே நேரிய , சீரிய பாதையாக அமைந்து வந்திருக்கும் மனித பண்புகளும் , வாழ்வியல் அறங்களும் , மதிப்பிழந்து கொண்டிருக்கும் வேகம் நிறைந்த வாழ்க்கை சூழல் இன்றைய சமூகத்தை பெரிதும் பாதித்துள்ளது . மனித பண்புகளை திரும்பி பார்க்க கூட நேரம் அற்ற நிகழ்வுகளால் மட்டுமே நகர்ந்து கொண்டிருக்கிறது இன்றைய சமூகம் . இதனை நெறிப்படுத்த மேம்பாடு அடையச் செய்ய தமிழ் இலக்கியங்களின் பங்கு இன்றியமையாததாகும். அவ்வகையில் பக்தி இலக்கியங்களில் ஆழ்வார்களின் பாசுரங்களில் கூறப்பட்டுள்ள வாழ்வியல் சிந்தனைகள் பற்றி இக்கட்டுரை ஆய்கின்றது . குழந்தை பருவத்தில் தொடங்கி வீடு பேறு அடைவது வரை ஆழ்வார்களின் சிந்தனைகள் வழி நோக்குதல் கட்டுரையின் ஆய்வாகும்.

## குழவி சீராட்டல்

### அ) பிறப்பு நிலை

ஊர்த்தலைவராக உள்ளவரது இல்லத்தில் குழந்தை பிறந்ததெனில் அந்த மகிழ்ச்சியை ஊரே கூடி கொண்டாடுதல் என்பது வழக்கம் . அவ்வகையில் ஆயர்பாடியில் கண்ணன் பிறந்துள்ளான் என்ற செய்தியை கேள்விப்பட்டவுடன் அவ்வூர் மக்கள் மிகுந்த மகிழ்ச்சியினை அடைந்து,

“எண்ணெய் சுண்ணம் எதிரெதிர் தூவிய
கண்ணன் முற்றம் கலந்தன றாயிற்றே”(பா.13)

என்னும்படி, எண்ணெயையும் மஞ்சள் பொடியையும் ஒருவர் மீது ஒருவர் தூவிட அவ்விரண்டும் கீழே விழுந்து கண்ணன் பிறந்த அந்த மாளிகையின் முற்றத்தைச் சேறாக்கின. தங்கள் மீதுவிழுந்த அந்தப் பொடிகளைக் கழுவி நீக்க எண்ணெய் தேய்த்து நீராடினர் என்பதை,

அண்டர் மிரட்டிப் புகுந்துநெய் பாடினார் (பா17)

என்றும் குறிப்பிடுவர் . இப்பழக்கவழக்கங்கள் இன்றைக்கு வடநாட்டு மக்களிடத்தில் உள்ளதை நாமறியலாம்.

பிறந்த குழந்தை பால் குடிப்பதானால் அதன் நாக்கில் மாவு திரண்டிருக்கும் . குழந்தையை நீராட்டும் போது நாக்கில் இருக்கும் அம்மாவுத்திரட்சியை இக்காலத்தில் குழந்தை வளர்ப்பான் பெயர் சொல்லாது என்று கூறப்பெறும் வசம்பினைச் சுட்டு அதனை நாக்கில் தடவி நீக்குவர் . பெரியாழ்வாரின் காலத்தில் மஞ்சள் தேய்வைக்கொண்டு நாக்கு வழித்தல் நடந்துள்ளதை

“........பசுஞ்சிறு மஞ்சளால்

ஐயநா வழித்தாளுக்கு” (பா18) என்பதனால் அறியலாம்.

குழந்தை பிறந்த நாளிலிருந்து பத்து நாட்கள் கடந்த பிறகு , தீட்டுக்கழித்தல் என்னும் சடங்கு நிகழம் , அதன்பிறகுதான் குழந்தையைப் பிறர் தூக்குதற்கு உடன்படுவர் . இவ்வழக்கத்தை ஆயர்பாடியிலும் கொண்டாடினார் . பெயர் சூட்டும் நாளும் அதுவாகவே இருக்கும் . தான் ஒரு ஆணாக இருந்தாலும் பெரியாழ்வார் இச்சடங்கு நிகழ்வை மறவாமல் வெளிப்படுத்துகின்றார் . இதனை

" பத்து நாளும் கடந்த இரண்டாம்நாள்
எத்திசையும் சயமரம் கோடித்து
மந்தமாமலை தாங்கிய மைந்தனை
உத்தானம் செய்து உகந்தனர் ஆயரே ” ( பா20 )

எனும்திருமொழியால் அறியலாம்.

ஆ) அம்புலி காட்டும் பருவம்

" தன்முகத்துச் சுட்டித் தூங்கத் ” என்று தொடங்கி பகவான் தவழ்ந்து புழுதியளைந்த பொன்மேனியை அநுபவித்து அம்புலி காட்டுகின்றார் . " உய்ய உலகு " என்று தொடங்கும் பதிகத்தில் பகவானின் செங்கீரைப் பருவத்தை அநுபவிக்கிறார் . அடுத்து சப்பாணிப் பருவத்தையும் , தளர் நடைப்பருவத்தையும் , அநுபவித்து ஒன்பதாவது பதிகத்தில் ' புறம்புல்கலை ' ( முதுகைத் தழுவுதலை ) “ வட்டு நடுவே என்று தொடங்கி " குட்டன் வந்தென்னை புறம்புல்குவான் என்று அநுபவிக்கிறார்".

நிலாவைக் காட்டி அழுகின்ற குழந்தையின் அழுகையை நிறுத்துவதும் சோறு உண்ணாத குழந்தையை உண்பிப்பதும் , விளையாட அழைப்பதும் அன்று தொட்டு இன்று வரை உள்ளதான வழக்கமாகும் . பிள்ளைத்தமிழ் என்ற சிற்றிலக்கிய வகைக்கு வித்திட்ட பெரியாழ்வார் " அம்புலிப்பருவம் " எனும் உயரிய பருவ நிலைக்கு உரிய சாம , பேத , தான , தண்டம் எனும் நால்வகை நிலையிலும் இதனைப் படைத்து தமிழிலக்கியத்தைப் பெருமைப்படுத்துகின்றார் .

" என்மகன் கோவிந்தன் கூத்தினை இளமாமதீ
நின்முகம் கண்ணுள ஆகில் நீயிங்கே நோக்கிப்போ "(பா54) என்றும்
அஞ்சன வண்ணனோடு ஆடலாட பாடல் ஆட வுறுதியேல்
மஞ்சில் மறையாதே மாமதீ ! மகிழ்ந்தோடிவா (பா55)என்றும்
சாம , பேத , தான நிலைகளில் கூறியவர் அப்படி வரவில்லையானால்
“ஆழிகொண் டுன்னை யெறியும் ஐயுற வில்லைகாண்
வாழ உறுதியேல் மாமதீ மகிழ்ந்தோடிவா ” (பா60)

என்று தண்டனை வழங்குவான் என்ற நிலையிலும் கூறி மாமதியை விளையாட அழைத்து மகிழ்வார்.

இ). காதுகுத்தும் சடங்கு

இக்காலத்தில் தன்குல தெய்வக்கோயிலில் குழந்தைக்கு மொட்டையடித்தும் காதுகுத்தும் சடங்கையும் நிகழ்த்தி வருவர் . அச்சடங்கை நடத்த அக்கோயில் பூசாரியோ அன்றிப் பொற்கொல்லரோ உடன்வருவர் . கண்ணபிரானுக்கு காதுகுத்துதலைத் தாயாகிய யசோதையே செய்ததாக அமைத்திருப்பது குறிப்பிடத்தக்கது . காதுகுத்தும் சடங்கு நடத்துபவர்கள் உறவினர்களையும் அக்கம்பக்கத்தில் உள்ளவர்களையும் அழைப்பர் . வந்தவர்களுக்கு வெற்றிலை , பாக்கு முதலானவற்றைக் கொடுத்தல் மரபு . இதனைச் செய்துவிட்டேன் என்பதை யசோதை

“…………கேசவ நம்பி! உன்னைக் காதுகுத்த
ஆய்ப்பாலர் பெண்டுகள் எல்லாரும் வந்தார்
அடைக்காய் திருத்தி நான் வைத்தேன் " ( பா 139 )

என்பதால் அறியலாம் .காதுகுத்தும்பொழுது நூல்திரியை எரிச்சல் உண்டாகாதபடி , குழந்தையின் காதுகளில் இட்டு காதுகுத்துளைகளைப் பெரிதாக்கி , அதன்பின்னர் காதில் அணியவேண்டிய பொன்நகையை அக்காலத்தில் அணிந்து அழகு பார்த்துள்ளனர்,

ஆயர்பாடிச் சிறுவர்கள் இவ்வாறு காது பெருக்கித் திரிவதை

" சேரியிற் பிள்ளைகள் எல்லாரும் காதுபெருக்கித்
திரியவும் காண்டி ....... " (பா 148 )என்பதால் அறியலாம்.

ஈ). நீராட்டுதல்

குழந்தைகளை நீராட்டும்பொழுது மஞ்சள், எண்ணெய், பொடிகள் முதலானவற்றைப் பயன்படுத்துவர். யசோதையோ எண்ணெயும் , புளிப்பழமும் வைத்துக்கொண்டு கண்ணனை நீராட்ட அழைக்கிறாள் . இப்பழக்கம் இக்காலத்து இல்லாதது இங்கு குறிப்பிடத்தக்கது.

" வெண்ணெய் அளைந்த ………. நீராட வாராய் " (பா152)

என்னும் பாடலின் வாயிலாக , வெண்ணெயை உடல் முழுவதும் தடவிக்கொள்வதால் ஏற்படும் மொச்சை நாற்றமும் அத்துடன் விளையாடுவதால் புழுதியும் படிந்து உடலில் தினவு ஏற்படுவதால் இரவில் உறக்கம் வராமல் படுக்கையில் உடம்பைத் தேய்த்துக் கொள்கிறான் . இதனை நீக்கவே எண்ணெய் தேய்த்து , அதுபோக புளிப்பழத்தைத் தேய்த்து நீராட அழைக்கிறேன் . எனவே, நாராயணனே! நீராட வா! என்றாள். இதனையே

“………………நீ பிறந்ததிருவோணம்
இன்று நீ நீராட வேண்டும் எம்பிரான் " (பா153)

என்ற வரிகளாலும் புலப்படுத்துவர். பிறந்தநாளில் நீ நீராட வேண்டும் என்று அழைப்பதின் வாயிலாக, பிறந்தநாளன்று எண்ணெய் தேய்த்துக்குளிக்கும் பழக்கம் இருந்ததையும் நாமறிகின்றோம் . குளித்தபிறகு தலைமுடியைச் சீவிக்கட்டிக் கொள்ள வேண்டும் . அப்படிக் கட்டாமல் விடுபவரைக் கண்டு ஊரார் நகைக்கின்ற வழக்கமும் இருந்ததை

" கண்டார் பழியாமே அக்காக்காய்! " (பா171)

என்பதாலும் அறியலாம் . இவற்றின் வாயிலாகப் குழந்தை வளர்ப்பு பற்றி ஆழ்வார் கூறியவற்றை அறியலாம். வரலாற்றியல் ஆய்விற்கும் இவை பயன்படத்தக்கவை.

செய்யாதன செய்யோம்

அ) பொது உடைமை

பூதத்தாழ்வார் , " பண்டிப்பெரும்பதியை ஆக்கிப்பழிபாவம் கொண்டிங்கு வாழ்வார் " என்றது குறிக்கொள்ளத் தக்கது . பண்டி என்பது வயிறு , அதனைப் பெரிய நகரம் போல் பெரிதாக்கி , அதாவது , எவ்வளவு சரக்கு வரினும் , பெரிய நகரத்துக்குப் போதாதது போல வந்ததெல்லாம் தன் வயிற்றுக்கே போதாது என்று கருதிச் சொத்துக்களைச் சேர்த்துக் குவிப்பது பழிபாவத்துக்குக் காரணமாகும் என்கிறார் . இதனால் சொத்துக்களை ஒரே இடத்தில் குவித்துக் கொள்வது தீய செயல் என்பது போதரும் . சொத்துக்களை ஒரே இடத்தில் குவிப்பதால் பலர் பட்டினி கிடக்க நேருகிறது . பட்டினியால் உழல்பவர் வடிவில் உள்ள இறைவனுக்குப் பொருளை ஒரே இடத்தில் குவிப்பவர்கள் தீங்கிழைத்தவர்களாகிறார்கள் . அதுவே பாவம் எனப்படும் . பழிபாவத்திற்கு அஞ்சி , நேர்மையோடு பொருள் ஈட்டி மற்றவர்களுக்கும் பகிர்ந்து அளித்து அநுபவிப்பதே வாழ்கைக்கு வளம் தரும் . பாகவதத்தில் தன் வயிற்றுத் தேவைக்கு மேல் சேர்ப்பவன் திருடன் , அவன் தண்டனைக்கு உரியவன் என்று சொல்லப்பட்டுள்ளது . எனவே , எல்லோருக்குமாக இறைவன் படைத்த பொது உடைமையைத் தனக்கே உடைமையாக ஆக்குவது பெரும்பாவம் என்றதாயிற்று.

ஆ) நெஞ்சுக்கு உபதேசம்

"பயனல்ல செய்து பயனில்லை நெஞ்சே" (பா2888)

நெஞ்சு நினைக்கிறது ; செயல் வெளிப்படுகிறது . எல்லாச் செயல்களுக்கும் வித்து நெஞ்சில் உதயமாகும் எண்ணங்களே. பந்த பாசங்களுக்கு நெஞ்சே இருப்பிடம்; மோட்சம் பெறவேண்டும் எனும் ஆசைக்கும் அதே நெஞ்சுதான் காரணம். நல்லதுக்கும், அல்லாததுக்கும் பொது நெஞ்சம் . ஆகவே " நெஞ்சே, கவனம், கவனம்! பயனற்றவைகளில் எண்ணங்களைச் செலுத்தாதே " என எச்சரிக்கிறார் ஆழ்வார்! திருவாய் மொழி முதல் பாசுரத்திலேயே "தொழுதெழு - என் மனனே" என்றார். தொழுது . எழுவது பயனுள்ள செயல். அதைவிட்டு வேறு பயனற்ற செயல்களில் சிந்தனையைச் செலுத்தாதே என்று தன் நெஞ்சுக்கு உபதேசம் செய்கிறார்.

இ). வென்றிடினும் வேண்டற்க சூது

"சூதென்று களவும் ஆதும் செய்யாதே" (பா2895)

களவு என்பதனை யாரும் காணாமல் இருக்க , மற்றவர் பொருளை அபகரித்தல். சூது என்பது கண் முன்னே அபகரித்தல். 'வென்றிடினும் வேண்டற்க சூது ' என்றல்லவோ சொன்னார் திருவள்ளுவரும்? வெற்றி கிடைக்கின்றது என்று கொண்டாலும் சூது எனும் பெரும்பாதகம் , நற்குணங்கள் பொருந்திய தர்மபுத்ரரையும் , அவர் சகோதரர்களையும் பெரும் துன்பத்தில் ஆழ்த்திய அந்தச் செயல் முன்னுதாரணமாக இருந்தும் அதையும் செய்யலாமோ ? களவு செய்யலாமோ இராவணனுக்கு நேர்ந்த கதி தெரிந்தும் ? ஆக, " செய்யாதன செய்யோம் " என்று உறுதி பூண்டு . குற்றம் ( சாத்திரத்தால் விலக்கப்பட்டவை) எனத் தெரிந்தும் , அவைகளை விலக்கி வாழவேண்டும் என அறிவுரை கூறுகிறார் ஆழ்வார் .

குந்தி தின்றால் குன்றும் குறையும்
இறைவன் கொடுத்துள்ள கை , கால்களைக் கொண்டு உழைத்துப்பிழைக்க வேண்டும், சோறு கூறைக்காக மன்னாது மானிடரை வாழ்த்துதல் கூடாது . ஏனெனில் இப்போதிருக்கும் செல்வர்கள் நாளை ஏழையாகிவிடலாம் என்று நம்மாழ்வார் தமது திருவாய்மொழியில், “வம்மின்புலவீர், நும்மெய்வருத்திக் கைசெய்து உய்ம்மினோ இம்மன்னுலகில் செல்வர் இப்போதில்லை நோக்கினோம்." என அருளிச் செய்துள்ளார் . உழைப்பின் சிறப்பினைக் கொண்டு நோக்கும்போது, வகுப்பு வேறுபாடுகளுக்கு இடமில்லை . குடிமையில் கடமைபட்ட குக்கரில் பிறப்பரேலும் முடியினில் துளபம் வைத்த முகுந்தனின் அடியார்களை இறைவன் கொண்டாடுகிறான் என்று எண்ணி , அவர்களை இறைவனோடு ஒக்க வழிபடத்தக்கவர்கள் . பிறப்பு ஒழுக்கம் கல்வி முதலியவற்றால் எவ்வளவு பெரியவர்களாயிருந்தாலும் , அவை மமதைகுக் காரணமாகி , அடியவரிடத்து பழி மூட்டி பெருந்தீங்கை விளைத்துவிடும் என்றும் உணர வேண்டும் .
சமூக மாட்சி
மண்ணில் தோன்றி மண்ணாக அழிந்து போகும் அறியாமை நிறைந்த மனிதர்களுக்கு சாதியின் பெயரை தம் பிள்ளைகளுக்கு இடாமல் பெருமானது திருநாமத்தையே பெயரிட விரும்புங்கள் என்று ஆழ்வார் கூறுவதில் இருந்து அவரது சமூக சிந்தனை வெளிப்படுகிறது.

“மண்ணில் பிறந்து மண்ணாகும் மானிடப் பேர் இட்டு அங்கு” (பா387)

ஒரு காசுக்கு ஒரு பிடி நெல் விற்கும் பஞ்ச காலத்திலும் நம்மிடம் இருப்பதை ஒழிக்காமல் பயன் கருதாமல் சோற்றை விருந்தினருக்கு இடும் வள்ளல் தன்மை உடையவர்கள் என ஆழ்வார் கூறுவதில் இருந்து வறுமையுற்ற போதும் பதுக்காமல் பகிர்ந்து உண்ணும் மக்கள் வாழ்ந்தனர் என்னும் உயரிய சமூக பண்பை எடுத்துக் கூறுகிறார்.

“காசின் வாய்க் கரம் விற்கிலும் கரவாது மாற்று…” (பா369)

ஆழ்வாரின் கண்ணோட்டத்தில் மேன்மக்கள் டீம் மக்கள் என்ற பாகுபாடானது அவரவரின் செயல் தன்மையை பொருத்தி அமைகிறது என்பதை
“வழக்கொடு மாறுகொள் அன்று: அடியார் வேண்ட,” (பா2597)

இப்பாசுகத்தின் வாயிலாக அறியலாம் . மேன் மக்களை நோக்கி கீழ் மக்கள் ஒன்று வேண்டும்போது மேன்மக்கள் நஷ்டப்பட்ட ஆகிலும் உதவி செய்வதை உலகில் பார்க்கிறோம் இறைவனே அதுபோல என்னுடைய வேண்டுகோளுக்கு நீ உன் திருமேனியின் ஒளியை காட்டி அருள வேண்டும் என வேண்டுவதன் மூலம் அக்கால சமூக நிலையை எடுத்துரைக்கின்றார்.

திருமால் அடியவர்கள் குறிப்பாக பாகவதர்களுக்குள் – சாதி வேற்றுமை பாராட்டலாகாது என்ற உயரிய கருத்து ஆழ்வார்கள் வாழ்ந்த காலத்தில் தோன்றியிருந்தது என்பதும் புலனாகிறது .
தொண்டரடிப் பொடியாழ்வார் அந்தணர்களை விளித்து
“ பதிலா வொழுகலாற்றுப் பல சதுப்பேதிமார்கள்
இழி குலத்தவர்களேலும் எம்மடியார்களாகில் தொழுமினிர் ” (பா913)

" தமர்களில் தலைவராகிய சாதியத்தணர்களேனும்
நுமர்களைப் பழிப்பாராகில் நொடிப்பதோரளவில் ஆங்கே
அவர்கள்தாம் புலையர் போலும் " (பா914) என்று கூறுவர் . பாணர் மரபில் அவதரித்த திருப்பாணாழ்வாரை சாதி வேற்றுமை பாராட்டாதது சமுதாய உணர்வுக்கு சான்றாக கொள்ளலாம். ஆண்- பெண் பேதமும் பார்க்கப்படவில்லை. பதினொரு ஆண் ஆழ்வார்கள் இருப்பினும் பெண்ணாய்

தனித்துவம் பெறுகிறார் . ஆண்டாள் நாச்சியார் திருப்பாவை இரண்டாம் பாடலில் " வையத்து வாழ்வீர்காளே! வாருங்கள் பாவை நோன்பிருந்து பரமனையே பறையாக்கிக் கொள்வோம் ' என்று அறிவித்து சமத்துவக் கொள்கையை நடைமுறைப்படுத்தி விட்டார் . எத்துனை பரந்ததாக இருக்கிறது அவர் பக்தி, பாவை நோன்பு யாவருக்கும் என்பது பட்டவர்த்தனம் ஆகிறது.

தெய்வம் உறையுமிடம்

அறம் , பொருள் , இன்பம் , வீடு ஆகிய நான்கும் நூற்பயனாகக் கூறப்படும் . ஆனால் திருமடல்களில் வரும் தலைவியோ இன்பம் ஒன்றையே ஏற்றுக் கொள்கிறாள் . நூல்கள் போற்றும் அறமும் . பொருளும் , இறை இன்பத்தில் அடங்கி விடுகின்றன . அறம் , பொருள் , வீடு ஆகியவை இறை அனுபவத்திற்கே என்பது வைணவ தத்துவம் . எனவே அறம் பொருளாகிய இரண்டும் இன்பத்திற்குத் துணையான உறுதிப்பொருள் என்றே அமைகிறது . வீடு என்பது கடுந்தவத்தின் பயனாய் உடல் அழிந்த பிறகு கிடைக்கும் உறுதிப் பொருளாக நூல்களில் கூறப்பட்டுள்ளது . இஃதன்றி அந்த வீட்டினை மெய்யே சென்று கண்டறிந்தார் வந்து சொல்லக் கேட்டதே இல்லை . ஆகவே உறுதிப் பொருள் நான்கினுள் இன்பமே தலையானதாகும் எனப் பெரிய திருமடல் தலைவி கூற்றாக திருமங்கை ஆழ்வார் சிறப்பித்து கூறுகிறார்.

முடிவுரை

ஆழ்வார்களின் அருளிச் செயல்களின் தன்மை , எக்காலத்திற்கும் பயன்படும் வகையில் சீர்திருத்தச் நன்னெறிப்படுத்தும் வகையிலும் உயர்ந்த கருத்துக்களாகவும் , மாந்தரை நடைமுறைப்படுத்தப்பட்ட கோட்பாடு சமத்துவம் என்பதையும் இக்கட்டுரையின் வழி உணரமுடிகின்றது . ஆழ்வார் பாசுரங்கள் நமது பிறப்பு முதல் இறப்பு வரை உள்ள வாழ்விற்கு வழி காட்டுவதாக அமைவதோடு , அதற்கும் அப்பால் நமது ஆன்மாவை இறைவனிடம் சரணாகதி அடையச் செய்வதற்கான மார்க்கமாக செயல்படுகிறது.

துணைநூற்கள்:

“நாலாயிர திவ்யப் பிரபந்தம்” மூலமும் தெளிவுரையும் முதல் தொகுதி
முனைவர் இரா.வ. கமலக்கண்ணன, வர்த்தமானன் பதிப்பகம். பதிப்பு பிப்ரவரி 2015.

“நாலாயிர திவ்யப் பிரபந்தம்” மூலமும் தெளிவுரையும் இரண்டாம் தொகுதி
முனைவர் இரா.வ. கமலக்கண்ணன, வர்த்தமானன் பதிப்பகம். பதிப்பு பிப்ரவரி 2015.

“நாலாயிர திவ்யப் பிரபந்தம்” மூலமும் தெளிவுரையும் மூன்றாம் தொகுதி
முனைவர் இரா.வ. கமலக்கண்ணன, வர்த்தமானன் பதிப்பகம். பதிப்பு பிப்ரவரி 2015.

“நாலாயிர திவ்யப் பிரபந்தம்” மூலமும் தெளிவுரையும் நான்காம் தொகுதி
முனைவர் இரா.வ. கமலக்கண்ணன, வர்த்தமானன் பதிப்பகம். பதிப்பு பிப்ரவரி 2015.

“ஆழ்வார்கள் விழா மலர்”, வெளியீடு: அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயில், திருவரங்கம். 2010.

“நம்மாழ்வார் ஆய்வுக் கோவை”, வெளியீடு: அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயில், திருவரங்கம், 2011.

“பெரியாழ்வார் ஆய்வு மலர் ”, வெளியீடு: அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயில் , திருவரங்கம், 2014.